# 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

வெளிநாட்டுத்துறை 2016இன் முதலரைப்பகுதியில் கலப்பு செயலாற்றத்தை அனுபவித்திருந்தது. மெதுவான உலக பொருளாதார நடவடிக்கை மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட குறைந்தளவான உலகக் கேள்வி என்பன ஏற்றுமதிகளை பாதகமானளவில் பாதித்திருந்ததன் காரணத்தால் வெளியக வர்த்தக கணக்கானது தொடர்ச்சியாக அழுத்தங்களுக்குள்ளாகியிருந்த அதேவேளை, நுகர்வு மற்றும் முதலீட்டு பொருட்களின் அதிகரித்த இறக்குமதியானது குறைந்த எரிபொருள் விலைகளிலிருந்தான எதிர்பாராத நன்மைகளை ஈடுசெய்யப்பட்டிருந்தன. ஆகையால் வர்த்தக கணக்கின் பற்றாக்குறை 2016இன் முதலரைப்பகுதியில் 2.2 சதவீதத்தால் விரிவாக்கமடைந்திருந்தது. இக்காலப்பகுதியில் முதலாந்தர வருமான கணக்கின் பற்றாக்குறையானது குறைந்தளவாக காணப்பட்டாலும் விரிவாக்கமடைந்திருந்தது. எனினும், பிரதானமாக சுற்றுலாத்துறை மற்றும் தொடர்ச்சியான தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான கணிசமான வருவாய்களின் காரணமாக பணிகள் மற்றும் இராண்டாந்துறை வருமானக் கணக்குகள் மிகையினை பதிவுசெய்திருந்ததுடன் வெளியக நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 953 மில்லியனிலிருந்து 2016இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 795 மில்லியனுக்கு சுருக்கமடையச் செய்திருந்தது.

நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 2016இன் முதலரைப்பகுதியில் மெதுவடைந்திருந்தது. ஐக்கிய அமெரிக்காவின் பெடறல் றிசேர்வினால் 2015 திசெம்பரில் கொள்கை வீதங்கள் அதிகரிக்கப்பட்ட போதிலும் உலகப் பொருளாதாரத்தின் மெதுவான மீட்சி மற்றும் கொள்கை வீதங்களின் மேலதிக அதிகரிப்பு தொடர்பான எதிர்பார்க்கைகள் என்பன குறிப்பாக ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை என்பனபவற்றிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்களுக்கு இட்டுச்சென்றிருந்தது. ஏற்றுமதிகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் மெதுவான போக்கு, வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மெதுவடைவு மற்றும் அரச பிணையங்கள் சந்தைகளிலிருந்தான மூலதனங்களின் உறுதியான வெளிப்பாய்ச்சல்கள் என்பன நாட்டின் வெளிநாட்டுத்துறையில் சமநிலையற்ற தன்மையை அதிகரித்திருந்ததுடன் அலுவல்சார் ஒதுக்கினையும் குறைத்திருந்தன. இது சென்மதி நிலுவை நிலைமை மற்றும் அரசாங்கத்தின் பொருளாதார சீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றிற்கு துணைபுரிவதற்கு விரிவாக்கப்பட்ட நிதி வசதிகளின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து சிறப்பு எடுப்பனவு உரிமை 1.1 பில்லியன் (அண்ணளவாக ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) என்ற மூன்று வருட நிகழ்ச்சித்திட்டத்திற்கு இலங்கை நுழைவதற்கு இட்டுச்சென்றிருந்தது. பன்னாட்டு நாணய நிதியத்துடனான நிகழ்ச்சித்திட்டத்தினுள் நாடு நுழைந்தமையால் உருவாக்கப்பட்ட முதலீட்டாளர் மனோபாவத்தின் முன்னேற்றம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் மேலதிக கொள்கை வட்டிவீத அதிகரிப்பின் தாமதம் என்பன 2016 ஏப்பிறலில் இருந்து அரச பிணையங்கள் சந்தைகளிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களில் ஒரு திரும்பல் நிலைக்கு இட்டுச்சென்றிருந்தன. நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட கடன்கள் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் என்பன நிதியியல் கணக்கினை பலப்படுத்தியிருந்ததுடன் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்கினையும் மேம்படுத்தியிருந்தது. அதன்படி, 2016இன் செத்தெம்பர் இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்கானது 4.1 மாதங்களின் இறக்குமதிக்குச் சமனான ஐ.அ.டொலர் 6.5 பில்லியனில் காணப்பட்டது. இவ்வபிவிருத்திகளை வெளிப்படுத்தும் வகையில் தேறிய பன்னாட்டு ஒதுக்குகளிலான மாற்றத்தைக் காட்டுகின்ற சென்மதி நிலுவையின் திரண்ட மீதி 2015இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,489 மில்லியன் என்ற பற்றாக்குறையிலிருந்து 2016இன் செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 243 மில்லியன் என்ற மிகை நிலைக்குத் திரும்பியிருந்தது.

இலங்கை ரூபாவின் வெளியகப் பெறுமதியானது செத்தெம்பர் இறுதி காலப்பகுதிவரைக்கும் ஒப்பீட்டு ரீதியில் நிலையானதாகக் காணப்பட்டதுடன் ஐ.அ.டொலருக்கெதிராக 1.8 சதவீத தேய்வினைப் பதிவுசெய்திருந்தது. ஒட்டுமொத்த அடிப்படையில், உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீத சுட்டெண்கள் தேய்வடைந்திருந்ததுடன் இது நாட்டின் வெளியக போட்டித்தன்மையின் மேம்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது. அதேவேளை, மத்திய வங்கி 2016 மே காலப்பகுதியில் இருந்து அந்நியச்செலாவணி சந்தையில் கொள்வனவாளராக படிப்படியாகத் திரும்பியதுடன் அது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழான தேவைப்பாடுகளில் ஒன்றாக காணப்படுகின்ற தேறிய பன்னாட்டு ஒதுக்கு மட்டங்களை குறைநிரப்புச் செய்திருந்தது. எனினும், பணிகள் மற்றும் பண்டங்கள் ஆகியவற்றின் அதிகரித்த ஏற்றுமதிகள், மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்ற படுகடனை உருவாக்காத நிதியியல் உட்பாய்ச்சல்களைக் கவருதல் என்பன வெளியகத் துறையின் சமனிலையற்றதன்மையை குறைப்பதற்கும் நடுத்தரக்காலப்பகுதியில் எறிவு செய்யப்பட்டுள்ள பேரினப்பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்வதற்கும் முக்கியமான தேவைப்பாடாக உள்ளது.

## பொருட்களிலான வர்த்தகமும் வர்த்தக நிலுவையும்

- **2015இல் குறைவடைந்து காணப்பட்ட ஏற்றுமதிகளில் இருந்தான வருமானங்கள் மற்றும் இறக்குமதி மீதான செலவீனங்கள் என்பன 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மேலும் வீழ்ச்சியடைந்திருந்தன.** எனினும் 2016இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் ஒட்டுமொத்த வர்த்தக பற்றாக்குறை இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளிலான கூரிய வீழ்ச்சியின் காரணமாக ஆண்டுக்காண்டு அடிப்படையில் 1.6 சதவீதத்தினால் சிறிதளவால் விரிவடைந்தது. அதன்படி, இக்காலப்பகுதியில் வர்த்தக கணக்கிலான பற்றாக்குறையானது 2015இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5,449 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 5,538 மில்லியனுக்கு அதிகரித்தது.

- **2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 6,865 மில்லியனிற்கு ஆண்டுக்காண்டு அடிப்படையில் 4.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இவ்வீழ்ச்சிக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளைத் தொடர்ந்த வேளாண்மை ஏற்றுமதிகள் பெரிதும் பங்களித்தது. இலங்கையின் பிரதான ஏற்றுமதி இடங்களில் குறிப்பாக ருசியா மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் அரசியல் நிச்சயமற்றதன்மை மற்றும் பொருளாதாரச் சூழலின் சரிவு, 2016 யூன் இறுதிவரைக்கும் இலங்கையின் மீன் ஏற்றுமதிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் என்பவற்றுடன் இணைந்து சர்வதேச சந்தையில் பண்ட விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி என்பன இலங்கையின் ஏற்றுமதிகள் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தின.

வரைபடம் 5.1 வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றம்




- **உலகச் சந்தையில் வேளாண்மை பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி காரணமாக 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,521 மில்லியனிற்கு ஆண்டுக்காண்டு அடிப்படையில் 8.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.** வேளாண்மை ஏற்றுமதிகளில் தேயிலை, வாசனைத் திரவியங்கள் மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகள் என்பன இவ்வீழ்ச்சிக்கு பெரிதும் பங்களித்திருந்தன. 2014இன் மூன்றாம் காலாண்டிலிருந்து ஆரம்பமான ஆண்டுக்காண்டில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடையும் போக்கானது தேயிலை ஏற்றுமதியின் 2.1 சதவீத வீழ்ச்சி மற்றும் தேயிலை சராசரி ஏற்றுமதி விலையின் 5.4 சதவீத குறைப்பு என்பவற்றின் இணைந்த வெளியீட்டின் காரணமாக 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 835 மில்லியனிற்கு 7.3 சதவீதத்தினால் குறைவடைந்தது. பிரதான தேயிலை இறக்குமதி நாடுகளிலிருந்தான நலிவடைந்த கேள்வியின் விளைவாக சராசரி தேயிலை ஏற்றுமதியின் விலையானது 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட கிலோகிறாம் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 4.47 இலிருந்து 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கிலோகிறாம் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 4.23இற்கு குறைவடைந்தது. கறுவா ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவுசெய்திருந்த போதிலும் இவ்வாண்டில் இதுவரையும் பெற்றுக் கொள்ளப்பட்ட தாழ்ந்த அறுவடை காரணமாக கராம்பு மற்றும் மிளகின் தாழ்ந்த ஏற்றுமதி அளவுகளின் பிரதிபலிப்பினால் 2015இல் வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்த வாசனைத் திரவியங்களிலிருந்தான வருவாய்கள், 2016இன் முதல் எட்டு மாதங்களில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 22.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. பிரதானமாக பாக்கு, தானியங்கள் மற்றும் வெற்றிலைகள் என்பவற்றின் ஏற்றுமதிகளில் பதிவுசெய்யப்பட்ட தாழ்ந்த செயலாற்றம் காரணமாக 2016இன் முதல் எட்டு மாத காலத்தில் சிறு வேளாண்மை ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 21.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், 2016இன் முதல் எட்டு மாதக் காலப்பகுதியில் இறப்பர் ஏற்றுமதிகளில் இருந்தான

வருவாய்கள் 17.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த அதேவேளையில் தெங்கு ஏற்றுமதிகளில் இருந்தான வருவாய்கள் பெருமளவில் நிலையாகக் காணப்பட்டன.

- **மொத்த ஏற்றுமதிகளில் 75 சதவீதத்திற்கும் அதிகமாக வகைகூறிய கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், பிரதானமாக போக்குவரத்து கருவிகள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளில் பதிவுசெய்யப்பட்ட தாழ்ந்த ஏற்றுமதி வருவாய்கள் காரணமாக 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 5,315 மில்லியனிற்கு ஆண்டுக்காண்டு 2.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** இந்தியா மற்றும் அவுத்திரேலியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இரு பயணிகள் கப்பலுடன் சேர்த்து துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டப் பயன்பாட்டிற்காக 2014இல் இறக்குமதி செய்யப்பட்ட மணல் அகழ்வதற்கு பயன்படுகின்ற கப்பலின் ஏற்றுமதிக்கு கொடுபடவேண்டிய போக்குவரத்து கருவிகளில் இருந்தான ஏற்றுமதி வருவாய்கள், பிரதானமாக 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்த ஏற்றுமதிகளின் குறிப்பிடத்தக்களவு உயர் மட்டங்கள் காரணமாக இக்காலப்பகுதியில் ஆண்டுக்காண்டு 63.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இந்தியா மற்றும் சிங்கப்பூர் போன்ற பிரதான பிராந்திய பங்குபற்றுநர்களிடமிருந்தான தீவிரப் போட்டியின் பகுதியளவிலான காரணத்தால் கப்பல் மற்றும் வானூர்திக்கான எரிபொருளை பிரதானமாக உள்ளடக்கிய பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஆண்டுக்காண்டு 35.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தது. மேலும், இரத்தினக்கல், வைரம் மற்றும் ஆபரணங்களில் இருந்தான ஏற்றுமதி வருவாய்களின் குறைந்த செயலாற்றம் மற்றும் இறப்பர் உற்பத்திகளும் கைத்தொழில் உற்பத்தி ஏற்றுமதிகளின் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவு பங்களித்தது. எனினும், மொத்த ஏற்றுமதி வருவாய்களின் 49 சதவீதத்திற்கு வகைகூறிய புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 3.6 சதவீதத்தினால் அதிகரித்ததனால், 2014இன் நான்காம் காலாண்டிலிருந்து ஆரம்பித்த ஆண்டுக்காண்டு அடிப்படையில் குறைந்து செல்லும் போக்கானது மாறியது. ஆய்விற்கான காலப்பகுதியில் யூரோ மற்றும் அமெரிக்கா போன்ற பாரம்பரிய சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதி முறையே 3.6 சதவீதம் 1.7 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஏற்றுமதி 10.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

- **2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் முதலீட்டு பொருட்கள் இறக்குமதி மீதான செலவீனம் அதிகரிப்பினைப் பதிவுசெய்திருந்த போதிலும் இறக்குமதிகள் மீதான செலவீனம் ஐ.அ.டொலர் 12,403 மில்லியனிற்கு ஆண்டுக்காண்டு 1.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** பன்னாட்டுச் சந்தையில் பண்ட விலைகள் கணிசமான வீழ்ச்சியைப் பதிவுசெய்ததுடன் இறக்குமதி செலவுகளின் வீழ்ச்சிக்கு பெரிதும் பங்களிப்பு செய்த பயணிகள் கப்பல் இறக்குமதிக்கு அரசாங்கத்தால் கொள்கை அளவீடுகள் பின்பற்றப்பட்டது. பெற்றோலியமல்லா இறக்குமதிகள் மீதான செலவீனம் இக் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 10,902 மில்லியனிற்கு ஆண்டுக்காண்டு 1.2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.

- **இறக்குமதி கேள்வியை முகாமை செய்யவதற்காக பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினை பிரதிபலிக்கும் வகையில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவீனம் வீழ்ச்சியடைந்தது.** மொத்த இறக்குமதியில் 23 சதவீதத்திற்கு வகைகூறிய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,825 மில்லியனிற்கு ஆண்டுக்காண்டு அடிப்படையில் 10.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து

**வரைபடம் 5.2** ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் (சனவரி-ஓகத்து 2016)



உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் நெடுவாழ்வுத் தன்மையுடைய நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதி செலவீனத்தின் வீழ்ச்சி பிரதிபலிக்கப்படுகின்றது. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதி செலவீனம் ஐ.அ.டொலர் 1,039 மில்லியனிற்கு 7.6 சதவீதத்தினால் குறைவடைந்து அரிசியைத் தொடர்ந்து மரக்கறி மற்றும் பால் உற்பத்திகள் மீதான இறக்குமதி செலவீனத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. அரிசி இறக்குமதிகள் மீதான செலவீனமானது 2015இன் ஆரோக்கியமான நெல் அறுவடை மற்றும் 2016இன் பெரும்போக காலம் மற்றும் மே 2015 மற்றும் பெப்புருவரி 2016இல் அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீதான இறக்குமதி தீர்வை அதிகரிப்பின் தாக்கம் காரணமாக உள்நாட்டு சந்தையில் அரிசியின் கிடைப்பனவில் தாக்கத்தினை ஏற்படுத்தும் விதத்தில் 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 94.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழச்சியடைந்தது. நெடுவாழ்வுத் தன்மையுடைய நுகர்வுப் பொருட்களுடன் தொடர்புடைய இறக்குமதி, தனியார் மோட்டார் வாகனங்கள் மீதான இறக்குமதிச் செலவீனம் என்பன 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 547 மில்லியனிற்கு ஆண்டுக்காண்டு 39.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இது 2016 வரவுசெலவுத் திட்டத்தில் அரசாங்கத்தினால் மோட்டார் வாகனங்களிற்கு பிரேயோகிக்கக்கூடிய இறக்குமதி தீர்வையின் அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்டது. அதேவேளை, ஆடைகள், கருவிகள், அச்சிடப்பட்ட மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் மீதான இறக்குமதி செலவினங்களும் 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இறக்குமதி செலவினத்தை குறைப்பதற்கு பங்களிப்பு செய்திருந்தன. எனினும், ஆய்விற்குரிய காலப்பகுதியில் மருந்து மற்றும் மருந்தாக்கற் பொருட்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் தளபாடங்கள் என்பனவற்றின் மீதான செலவீனம் அதிகரித்தது.

- **மொத்த இறக்குமதியில் 50 சதவீதத்திற்கு அதிகமாக கணக்கிடப்பட்ட இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் 2016இன் முதல் எட்டு மாதக் காலப்பகுதியில் 6,309 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ஆண்டிற்காண்டு 2.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** இக்காலப்பகுதியில் இறக்குமதி அளவுகள் கணிசமான அளவான அதிகரிப்பைப் பதிவு செய்திருந்த போதிலும் அனைத்து எரிபொருள்

வரைபடம் 5.3 இறக்குமதிகளின் உள்ளடக்கம் (சனவரி - ஓகத்து 2016)




வகைகளினதும் பதிவு செய்யப்பட்ட சராசரி இறக்குமதி விலைகளின் குறைப்பின் முக்கிய காரணத்தினால் எரிபொருள் இறக்குமதி மீதான செலவினமானது ஆண்டுக்காண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,501 மில்லியனுக்கு 18.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. பாதகமான காலநிலை நிலைமைகள் காரணமாக ஏற்பட்ட உயர் வெப்ப சக்தி உருவாக்கம் மற்றும் மோட்டார் வாகன பாவனைகளின் அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக மசகெண்ணெய் இறக்குமதிகளின் அளவு 10.5 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளை சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி இறக்குமதிகளின் அளவு 11.6 சதவீதத்தால் அதிகரித்தது. மசகு எண்ணெயின் சராசரி இறக்குமதி செலவினம் விலை, 2015 தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 61.67 உடன் ஒப்பிடுகையில் 2016 இன் முதல் எட்டு மாதங்களில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 43.44 ஆக இருந்தது. இந்த காலகட்டத்தில், இறக்குமதி செலவீனம், பன்னாட்டு சந்தைகளில் ஆண்டுக்காண்டு அடிப்படையிலான விலை வீழ்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் உலோகங்கள், உரம் மற்றும் கோதுமை மற்றும் சோளம் என்பவற்றின் மீதான இறக்குமதி செலவினம் முறையே 23.4 சதவீதம், 38.8 சதவீதம் மற்றும் 23.2 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தது. எனினும் புடவைகள் மற்றும் ஆடைகள் என்பவற்றின் ஏற்றுமதிகளின் உயர்ந்தளவான செயலாற்றங்களுக்கு இசைந்து செல்லும் வகையில் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் என்பவற்றின் மீதான இறக்குமதி செலவினம் 2016இன் முதல் எட்டு

மாதங்களில் ஐ.அ.டொலர் 1,765 மில்லியனுக்கு ஆண்டுக்காண்டு அடிப்படையில் 14.0 சதவீதத்தால் அதிகரித்திருந்த. மேலும், பதிவுசெய்யப்பட்ட தங்க இறக்குமதிகளின் கணிசமான வளர்ச்சியின் காரணமாக, வைரம், விலைமதிக்கத்தக்க கற்கள் மற்றும் உலோகங்கள் என்பவற்றின் மீதான இறக்குமதி செலவினம், ஆண்டுக்காண்டு அடிப்படையில் 128.0 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளையில், ஆய்வுக்குரிய காலப்பகுதியில் கனிப்பொருள் உற்பத்தி, மற்றும் வாகனங்கள் மற்றும் பொறிப்பாகங்கள் மீதான இறக்குமதி செலவீனங்களும் கணிசமானளவு அதிகரித்தது.

- **போக்குவரத்து கருவிகளின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் முதலீட்டு பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 8.4 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 3,260 மில்லியனிற்கு அதிகரித்திருந்ததுடன் இது எதிர்காலத்தில் சாத்தியமான விரும்பத்தக்க பொருளாதார செயற்பாட்டிற்கு சமிக்ஞையளித்திருந்தது.** 2016இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் கட்டிடப் பொருட்கள் மீதான இறக்குமதி செலவீனம் முறையே 22.4 சதவீதம் மற்றும் 21.4 சதவீதத்தினால் கணிசமானளவு அதிகரித்தது. கட்டிடம் பொருட்களின் அனைத்து துணைப்பிரிவுகள், அதேபோன்று பொறியியல் கருவிகள் தவிர்ந்த பொறிகள் மற்றும் கருவிகள் மீதான இறக்குமதி செலவீனம் கருத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் அதிகரித்தது. எனினும், வாகனங்களின் இறக்குமதிகளைக் குறைப்பதற்காக அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை அளவீடுகளின் தாக்கப் பிரதிபலிப்பின் மூலம் போக்குவரத்து கருவிகள் மீதான இறக்குமதிச் செலவீனம் 38.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது வீதி வாகனங்களின் குறிப்பாக முச்சக்கரவண்டி மற்றும் பேருந்துக்களின் இறக்குமதிகளில் பிரதிபலிக்கப்படுகிறது.

## வர்த்தக மாற்று விகிதம்

- **ஏற்றுமதி விலைகளின் தேய்வுடன் ஒப்பிடுமிடத்து இறக்குமதி விலைகளின் தேய்வானது கூர்மையாக காணப்பட்டதன் காரணத்தினால் வர்த்தக மாற்று**

வரைபடம் 5.4 வர்த்தக மாற்றுவிகிதமும் வர்த்தக சுட்டெண்களும்




**விகிதமானது 2016இன் முதல் ஏழு மாதங்களில் 2015இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து சாதமான மட்டத்திற்கு அதிகரித்திருந்தது.** குறிப்பாக பன்னாட்டு சந்தையில் எரிபொருள் உள்ளடங்களாக பண்டங்களின் குறைந்தளவான விலைகளை பிரதிபலிக்கும் வகையில் 2016இன் முதல் எட்டு மாதங்களில் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச்சுட்டெண் ஆண்டுக்காண்டில் 91.0 சுட்டெண் புள்ளிகளுக்கு 5.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மேலும், அடிப்படை உலோகம், கோதுமை, சோளம் தானியங்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திகள் என்பனவற்றுடன் தொடர்புடைய இறக்குமதி விலைச்சுட்டெண்களும் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச்சுட்டெண் கணிசமானளவு வீழ்ச்சியடைவதற்கு பங்களித்திருந்தது. அதேவேளை, அனைத்து முக்கிய ஏற்றுமதி வகைகளின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக 2016இன் முதல் எட்டு மாதங்களில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 3.6 சதவீதத்தால் 94.5 சுட்டெண் புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. அதன்படி, வர்த்தக மாற்று விகிதமானது 2015இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து 2016இன் முதல் எட்டு மாதங்களில் சராசரியான 102.7 சுட்டெண் புள்ளிகளுக்கு 2.4 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தது. எனினும், எரிபொருளுடன் தொடர்புடைய உற்பத்திகள் நீங்களான வர்த்தக மாற்று விகிதம் 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## பணிகளிலான வர்த்தகம்

- **பணிகளிலான வர்த்தகத்தின் மிகை நிலையானது 2016இன் முதலரைப்பகுதியில் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்திருந்தது.** பயணம், போக்குவரத்து

மற்றும் தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் என்பனவற்றை பிரதானமாக உள்ளடக்கிய சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கானது பயணம் மற்றும் போக்குவரத்து துணைத்துறைகளில் இருந்தான அதிகரித்த பங்களிப்புடன் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் மிகைநிலையான ஐ.அ.டொலர் 1,059 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2016இன் முதல் அரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,228 மில்லியன் மிகை நிலையைப் பதிவுசெய்திருந்தது.

- **போக்குவரத்து துறைக்கான மொத்த உட்பாய்ச்சலானது தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.** பயணிகள் கட்டணங்கள், கப்பல் கட்டணங்கள் மற்றும் துறைமுகம் மற்றும் விமான நிலையத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய போக்குவரத்து பணிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,118 மில்லியனுக்கு 5.9 சதவீத வளர்ச்சி வீதத்தை பதிவு செய்திருந்தது. இக்காலப்பகுதியில், பிரதானமாக சிறிலங்கன் விமானத்தின் ஊடாக இலங்கைக்கு வருகைதந்த பயணிகளின் அதிகரித்த எண்ணிக்கையுடன் பயணிகள் கட்டணங்கள் கணக்கின் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 552 மில்லியனுக்கு 9.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும், குறிப்பாக மத்திய கிழக்கு மற்றும் தூரகிழக்கு என்பவற்றுக்கான சேருமிடங்களின் எண்ணிக்கை மற்றும் விமானங்களின் தடவைகள் என்பவற்றின் அதிகரிப்பானது இத்துறையின் அதிகரித்த வருவாயை நோக்கி பங்களித்திருந்தது. எனினும், விமானங்களுக்கான எரிபொருள் விலைகளின் வீழ்ச்சியின் காரணமாக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற விமானங்களினால் மேற்கொள்ளப்பட்ட விமானக் கட்டணங்களின் கீழ்நோக்கிய சீராக்கம் பயணிகள் கட்டணங்களில் இருந்தான வருவாய்களை எதிர்க்கணிய ரீதியில் பாதித்திருந்தன. அதேவேளை, சரக்கு மற்றும் கொள்கலன் கையாளல் மற்றும் தொடர்புடைய பணிகளின் மேம்படுத்தப்பட்ட செயலாற்றத்தின் காரணத்தால் கப்பல் மற்றும் துறைமுகம் மற்றும் விமானநிலையம் என்பவற்றுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் கணக்கின் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 566 மில்லியனுக்கு 2.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இலங்கை துறைமுக அதிகார சபை கொழும்பு துறைமுகத்தில் களஞ்சிய வசதிகளை விரிவாக்குவதற்கு 2016 ஓகத்தில் புதிய களஞ்சியப்படுத்தல் மத்திய நிலையத்தின் திறப்பு உள்ளடங்கலாக பல படிமுறைகளை எடுத்திருந்தது. இக்களஞ்சியப்படுத்தல் மத்திய நிலையத்தின் திறப்புடன் சரக்கின் தொழிற்பாட்டு வசதிகள் மற்றும் சரக்கின் போக்குவரத்து என்பனவும் மேலும் விரிவாக்கம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும் திருகோணமலை துறைமுகத்தை துறைமுக நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு 2016 யூனில் இலங்கை சிங்கப்பூருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றிற்குள் நுழைந்ததுடன் இது கைத்தொழில் வலயமொன்றையும் உள்ளடக்கியிருக்கும். அதேவேளை, சரக்கு மற்றும் பயணிகள் விமானங்கள் ஆகிய இரண்டையும் கவர்வதற்கு உதவுகின்ற குறிப்பாக களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து மற்றும் மீள் எரிபொருள் நிரம்பல் போன்றவற்றில் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கு எதிர்கால முதலீட்டாளர்களின் நாட்டங்களை வெளிப்படுத்துமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

வரைபடம் 5.5 சுற்றுலாப் பயணிகளின் வருகையும் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களும்




- **முரண்பாட்டிற்கு பின்னரான பொருளாதாரத்தின் ஒரு பாரியளவானதும் விரைவாக வளர்ச்சியடைந்துவரும் துறைகளாக மாற்றமடைவதற்கு இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலானது ஒரு விரைவான வரிவாக்கத்தையும் பன்முகப்படுத்தலையும் அனுபவித்து வருகின்றது.** சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்தான அதிகரித்த வருகைகளினால் வழிநடாத்தப்பட்டு 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 14.6 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சி வீதத்தினை

**வரைபடம் 5.6** நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை (சனவரி - செத்தெம்பர் 2016)




பிரதிபலிக்கும் விதத்தில் 1,508,405இற்கு மொத்த சுற்றுலா பயணிகளின் வருகைகள் அதிகரித்திருந்தது. இது 2016ஆம் ஆண்டிற்கான 2.2 மில்லியன் வருகைகள் என்ற வருடாந்த இலக்கின் 69 சதவீதமான அடைவினை காட்டி நிற்கின்றது. பிரதானமாக ஐக்கிய இராட்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்தான வருகைகள் 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் வளர்ச்சிக்கு உயர்ந்தளவான பங்களிப்பை வழங்கியதுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் ஆதிக்கம் செலுத்தி இருந்தன. 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் குறிப்பாக சீனாவிலிருந்தான வருகைகளில் 29.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியினால் உந்தப்படுத்தப்பட்டு கிழக்கு ஆசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 18.6 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்திருந்தது. எரிபொருள் விலைகளின் கணிசமான வீழ்ச்சியின் காரணத்தால் வருமானத்தின் சாத்தியமான மெதுவடைவின் காரணத்தால் கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான வருகைகள் சார்பளவில் குறைந்தளவான வளர்ச்சியையே காட்டியிருந்தன.

- **2016இன் முதல் ஒன்பது மாதங்களில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் தொடர்ச்சியாக கணிசமானளவான வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது.** இதன்படி, ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள் ஆண்டுக்காண்டில் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,181 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து ஐ.அ.டொலர் 2,500 மில்லியனுக்கு 14.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தது. சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளினால் ஆதரவளிக்கப்பட்டு ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் உச்ச அளவான சுற்றுலா பருவகாலப் பகுதியிலான அதிகரித்த சுற்றுலாப்பயணிகள் வருகைகளின் எண்ணிக்கையுடன் சுற்றுலாத்துறையில் இருந்தான வருவாய்கள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- **2016இன் முதல் ஏழு மாதங்களில் சுற்றுலாத் துறை முதலீடுகள் மேலும் விரிவாக்கப்பட்டன.** நாட்டின் அமைதி மீளக்கட்டியெழுப்பப்பட்டதன் பின்னர் சுற்றுலாத்துறையானது கவர்ச்சிகரமான வளர்ச்சியினை அனுபவிக்கின்றது. இதன் விளைவாக முதலீட்டாளர் நம்பிக்கை அதிகளவு வளர்ச்சியடைந்திருப்பதுடன் இது சங்கிரி - லா, செறரோன், மரியோர், கிரான்ட் வைறர், மூவின் பிக், ஆர்ஜயு, ஜரிசி மற்றும் ஒனெக்ஸ் போன்ற சர்வதேச தரம்வாய்ந்த விடுதிகளிலிருந்தான முதலீடுகளிற்கு வழிவகுத்தது. அதேவேளை, 2016இன் முதல் ஏழு மாதங்களில் 2,700 அறையினளவைக் கொண்டதுடன் ஐ.அ.டொலர் 439 மில்லியன் பெறுமதியான 46 புதிய விடுதி செயற்றிட்டங்களிற்கான முன்மொழிவுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், இக்காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 89 மில்லியன் முதலீட்டுடன் அமைக்குமாறு 29 புதிய விடுதி செயற்றிட்டங்களிற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் இறுதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்புதிய விடுதி செயற்றிட்டங்கள் 2020இல் எறிவிடப்பட்ட 4.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகைகளிற்கு உணவு வழங்கக்கூடிய 75,000 அறைகள் கொண்ட கட்டிடத்திற்கான இலக்கினை அடைவதற்கு அரசாங்கத்திற்கு உதவுகிறது.

- **2016இன் முதல் ஆறு மாதங்களில் சுற்றுலாக் கைத்தொழிலை முன்னேற்றுவதனை நோக்கி பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன.** இவ்வழிமுறைகள் உயர் பெறுமதி கொண்ட சிறிய சந்தைகளுக்குள் நுழைவதற்கான சுற்றுக் கைத்தொழிலின் படிப்படியான பன்முகப்படுத்தல் மற்றும் கூ.ச.மா. க (கூட்டங்கள், சலுகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள்)

சுற்றுலா, திருமணச் சுற்றுலா திரைப்படச் சுற்றுலா போன்ற பாரம்பரியமற்று பகுதிகளின் அபிவிருத்தியும் துறையின் வளர்ச்சியை நோக்கி பங்களிப்பு செய்திருந்தது. 1963/28 இலக்க அதிவிசேட வர்த்தமானியின் கீழ் ஏப்பிறல் 2016இல் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை 1966இல் உருவாக்கப்பட்ட முன்னைய வகைப்படுத்தலிற்கு பதிலாக சுற்றுலாப் பயணிகள் விடுதிகளுக்கான புதிய வகைப்படுத்தலொன்றை அறிமுகப்படுத்தியிருந்தது. புதிய வகைப்படுத்தல் தேவைப்பாடுகளின் கீழ் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் பதிவுசெய்யப்பட்ட அனைத்து சுற்றுலா விடுதிகளும் நட்சத்திர வகைப்படுத்தலொன்றை வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் இது ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கும் மீள்வகைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். கட்டாய தேவைப்பாடுகள், அறைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை மற்றும் கட்டாயமற்ற பிரமாணங்கள் மீதான மேலதிக புள்ளி அடிப்படையிலான முறைமையொன்றின் இணைப்பின் அடிப்படை மீதான நிலையான வகைப்படுத்தலின் கீழ் நட்சத்திர வகைகள் வழங்கப்படுகிறது. மேலும், 2016இற்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்ளவாறு சுற்றுலாக் கைத்தொழிலின் முறைசாரா துறையில் இருந்து முறைசார் துறைக்கு உள்ளீர்ப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முறைசாராத் துறையிலுள்ள அனைத்து சுற்றுலா நிறுவனங்களும் கண்காணிக்கப்படுவதுடன் முறைசார் துறைக்குள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டன. மேலும், இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையானது விடுதி மேற்பார்வை, வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் சுற்றுலா பயிற்சி போன்ற பல்வேறு பணிகளை வழங்கும் “சுற்றுலா நடமாடும் சேவையினை” இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மீள ஆரம்பித்ததுடன் அத்தகைய சேவைகள் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் நிதி உதவியுடன் அறுகம்பே, பாசிக்குடா மற்றும் மன்னார் பகுதியில் மேற்கொண்டிருந்தது. நாட்டிற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையினை மேம்படுத்துவதில் சுற்றுலா ஊக்குவிப்புக்களின் முக்கியத்துவத்தினை கருத்திற் கொண்டு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புத் திணைக்களமானது 2016இன் முதலரைக் காலப்பகுதியில் உயர்சுற்றுலா சாத்தியப்பாடுடைய நாடுகளில் 21 வர்த்தகச் சந்தைகள் மற்றும் 7 வீதிக் காட்சிப்படுத்தல்களில் பங்குபற்றியிருந்தது. ஊடகவியலாளர்கள் மற்றும் வலைப்பதிவாளர்களின் வருகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 48 ஊடகவியலாளர்கள் மற்றும் 6 வலைப்பதிவாளர்கள் இக்காலப்பகுதியில் உபசரிக்கபட்டனர். ஒட்டுமொத்தமாக 2016இன் முதலரைப் பகுதியில் இலங்கைச் சுற்றுலா முன்னேற்ற திணைக்களத்தினால் ரூ. 359 மில்லியன் உடைய 211 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது 2016இற்கான இலக்கிடப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அடைவதற்கு உதவக் கூடும். இலக்கிடப்பட்ட சுற்றுலா முன்னேற்ற இலக்குகளின் விளைவாக, உலகப் புகழ்பெற்ற சுற்றுலா தொடர்பாக சஞ்சிகைகள் மற்றும் கனவுச் சுற்றுலா, பிரான்சின் கொண்டே நாஸ்ட் பிரயாணிகள் சஞ்சிகை, வொக்ஸ் செய்திகள் வெப்தளம் மற்றும் பிரித்தானிய பிரயாண முகவர்கள் கூட்டமைப்பு போன்ற அமைப்புக்களிடமிருந்து மேலதிக ஒப்பந்தங்களை இலங்கை பெற்றுக்கொண்டது.

- **தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகளிலிருந்தான வருவாய்கள் 2016இன் முதலரைக் காலப்பகுதியில் நிலையான வளர்ச்சியைக் காட்டியது.** தொலைத்தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல் பணிகள் ஏற்றுமதியிலிருந்தான மொத்த வருவாய்கள் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 410 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைப் பகுதியில் ஐ.அ.டொலர் 442 மில்லியன் பெறுமதியாகக் காணப்பட்டது. இப்போக்கின் தொடர்ச்சியாக வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வெளியிலிருந்து அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப்படுத்தப்பட்ட சேவைகளின் ஏற்றுமதியிலிருந்தான மொத்த உட்பாய்ச்சல்களும் அதிகரித்திருப்தற்கு ஏற்கனவே மதிப்பிடப்பட்டது. இதன்படி கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் 2015இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர்கள் 346 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரை காலப்பகுதியில் 7.6 சதவீதத்தினால் ஐ.அ.டொலாட 373 மில்லியனுக்கு அதிகரித்தது. கணக்கியல், பொறியியல், தொடர்பூட்டல் மற்றும் கட்டடவியல் மற்றும் சட்ட ரீதியான பணிகள் போன்ற விடயப்பரப்புகளில் மரபுரீதியான “மென்பாக அபிவிருத்தி” என்பவற்றிற்கு அப்பால்

பாரியளவான தகவல் தொழில்நுட்ப செயன்முறை மத்திய நிலையங்களுக்கு மாறுவதுடன் ஊடாக இலங்கை தகவல் தொழில்நுட்பத்திற்கான நிலையம், வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வெளியிலிருந்து அறிவினைப் பெற்றுக்கொள்ளல் பணிகள் போன்றனவற்றிற்கான மத்திய நிலையமாக இலங்கை தோற்றம்பெற்று வருகின்றது.

## முதலாந்தர வருமானம்

- **2016இன் முதலரைப்பகுதியில் முதலாந்தர வருமானக் கணக்கிலான பற்றாக்குறை சிறிதளவால் அதிகரித்தது.** இக் காலப்பகுதியில் முதலாந்தர வருமானக் கணக்கிலான பற்றாக்குறை 2015இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 925 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 955 மில்லியனுக்கு வகை கூறியது. குறிப்பாக அரசின் வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு மற்றும் உலகம் முழுவதிலும் காணப்பட்ட தாழ்ந்த வட்டி வீதங்களின் பின்னணியிலான தாழ்ந்த வட்டி வருமானம் என்பனவற்றால் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளால் உழைக்கப்பட்ட உயர் இலாபங்களைக் காட்டும் வகையில் இத்தொழில் முயற்சிகளின் உயர் பங்கிலாபக் கொடுப்பனவுகளுடன் பங்கிலாப கொடுப்பனவுகள் கணக்கின் வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்தன. எனினும் இக்காலப்பகுதியில் வதிவற்றோர் வசமுள்ள வெளிநின்ற திறைசேரி முறிகளின் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியுடன் முதலீட்டு சொத்துப்பட்டியல் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தன. மேலும் 2016இன் முதலரைப்பகுதியில் அரசின் செயற்றிட்டக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்த அதேவேளை தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தன. கடந்த காலங்களில், பாரம்பரிய செயற்றிட்டக் கடன்களுடன் ஒப்பிடுகையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல்களிலிருந்தான அரசின் அதிகளவு நிதியிடல் வருகைகளுடன் அரச வெளிநாட்டு நிதியிடலில் பயன்படுத்தப்பட்ட நிதியியடல் கருவிகளின் கலவை கூட்டமைப்பு ரீதியாக மாற்றமடைந்தது என அவதானிக்கப்பட்டது. அதேவேளை இக்காலப்பகுதியில் ஒதுக்குச் சொத்துக்களின் முதலீட்டில் இருந்தான வருவாய்களிலான வீழ்ச்சியுடன் முதலாந்தர வருமானக் கணக்கின் உட்பாய்ச்சல்கள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன.

## இரண்டாந்தர வருமானம்

- **தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் அரச மாற்றல்களை உள்ளடக்கிய இரண்டாந்தர வருமானக் கணக்கிலான மிகை 2016இன் முதலரைப்பகுதியில் அதிகரித்தது.** 2016இன் முதலரைப்பகுதியில், இரண்டாந்தர வருமானக் கணக்கின் தேறிய உட்பாய்ச்சல்கள் 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,035 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,146 மில்லியனுக்கு அதிகரித்தது. இக்காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2015இல் பதிவுசெய்யப்பட்ட சார்பு ரீதியில் குறைவடைந்த தளத்துக்கு மேலாக 5.3 சதவீதத்தால் அதிகரித்தது. பன்னாட்டு எண்ணெய் விலைகளின் வீழ்ச்சியுடன் மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணெய் ஏற்றுமதிகளின் வருமான வீழ்ச்சியானது தொழிலாளர் பணவனுப்பல்களின் ஒப்பீட்டளவிலான தாழ்ந்த வளர்ச்சிக்கு காரணமாகவிருந்தது. மேலும், வீட்டுப் பணிப்பெண்கள் உள்ளிட்ட தேர்ச்சி பெற்ற, ஓரளவு தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத வகைகளின் கீழான தொழிலாளர்களின் புலம்பெயர்வானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலத்தில் 10.5 சதவீதத்தில் வீழ்ச்சியடைந்ததுடன் இது பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்களின் குறைந்த வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்திருக்கக் கூடும். தேர்ச்சி பெறாத பெண்களின் புலம்பெயர்வை ஊக்கமிழக்கச் செய்வதற்கு எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள் தேர்ச்சி பெறாத வகையின் கீழான தொழிலாளர் புலம்பெயர்வின் வீழ்ச்சிக்குப் பிரதானமாகப் பங்களிப்புச் செய்தது. எனினும், இலங்கை வெளிநாட்டு வேலையமைப்புப் பணியகத்தால் வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தொழில்சார் நிபுணத்துவ வகையின் கீழான தொழிலாளர் புலம்பெயர்வு கடந்த சில வருடங்களாக அவதானிக்கப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களில் தொடர்கின்ற படிப்படியான உள்ளடக்க மாற்றம் ஆண்டின் முதலரைப் பகுதியில் 7.6 சதவீதத்தால் அதிகரித்தது. திரண்ட அடிப்படையில்

தொழிலாளர் பணவனுப்பல்கள் 2016 ஓகத்து வரையான காலப்பகுதியில் 4.5 சதவீதமான வளர்ச்சியாக பதிவு செய்து ஐ.அ.டொலர் 4,804 மில்லியனுக்கு தொகையிடப்பட்டது.

## நடைமுறைக் கணக்கு மீதி

- **2016இன் முதலரைப்பகுதியில் இலங்கையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2015இன் தொடர்பான காலப்பகுதியிலிருந்து ஏறத்தாழ 16.6 சதவீதத்தால் குறைவடைந்து, ஐ.அ.டொலர் 795இற்கு குறுக்கமடைந்திருந்தது.** நடைமுறைக் கணக்கின் மிதமடைதலும் சேவைகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளே பெருமளவில் துணைபுரிந்தன. அதேவேளை ஏற்றுமதி வருவாய்களின் வீழ்ச்சியின் பேரிலான வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் முதலரைப்பகுதியில் விரிவடைந்திருந்தமைக்கு போக்கு வரத்துக் கருவிகள், பெற்றோலிய உற்பத்திகள், தேயிலை மற்றும் வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதிகளின் கட்டுப்படுத்தப்பட்ட செயலாற்றமே பிரதான காரணமாகும். எனினும், வர்த்தகப் பற்றாக்குறையின் கணிசமான அதிகரிப்பானது எரிபொருள், போக்குவரத்துக் கருவிகள் மற்றும் தனியாள் மோட்டார் வாகனங்கள் என்பனவற்றின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் தூண்டப்பட்ட இறக்குமதிச் செலவினத்தின் வீழ்ச்சியால் பாரியளவில் குறைக்கப்பட்டது. இதன் ஊடாக வர்த்தகப் பற்றாக்குறையானது 2015இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடும் இடத்து 2016இன் முதலரைப் பகுதியில் 2.2 சதவீதம் என்ற குறைந்தளவான அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையும் ஆண்டின் யூன் இறுதிவரையான காலப்பகுதியில் விரிவடைந்தது. எனினும், பயணம் மற்றும் போக்குவரத்து, துணைத் துறைகளின் உயர்ந்த உட்பாய்ச்சல்களால் முக்கியமாகத் தூண்டப்பட்டதனால் சேவைகள் கணக்கின் மிகை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களை முக்கியமாக உள்ளடக்கிய இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகை என்பன வர்த்தகம் மற்றும் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையை பகுதியளவில் எதிரீடு செய்தது. ஒட்டுமொத்தமாக, இத்தகைய அபிவிருத்திகளின் விளைவால் முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 953 மில்லியனான ஓர் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைப் பகுதியில் ஐ.அ.டொலர் 795 மில்லியனுக்கு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மிதமடைந்து காணப்பட்டது.

## மூலதனக் கணக்கு மீதி

- **2016இன் முதல் காலாண்டில் மூலதனக் கணக்கின் மிகை குறைவடைந்தது.** 2015இன் முதல் காலாண்டில் ஐ.அ.டொலர் 33 மில்லியனுடன் ஒப்பிடுகையில், இந்தக் காலப்பகுதியில், அரசாங்கத்திற்கான மூலதன கொடைகள், ஐ.அ.டொலர் 8 மில்லியன் வருகையுடன் குறைவடைந்தது. இதன்விளைவாக, மூலதன கணக்கானது, 2015இன் தொடர்புடைய காலப்பகுதியில் தேறிய உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 29 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2016இன் முதல் காலாண்டில் தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 2 மில்லியனாக பதிவு செய்யப்பட்டது.

## நிதியியல் கணக்கு

- **2016இன் முதலரைப்பகுதியில் நிதியியல் கணக்கில் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தது.** சொத்துக்களின் தேறிய கொள்வனவுடன் தொடர்புடைய அதிஉயர் தேறிய உறப்பட்ட பொறுப்புக்களானது, 2015இன் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 667 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2016இன் முதலரைப் பகுதியில் தேறிய கடன்பாடுகளில் ஐ.அ.டொலர் 967 மில்லியனிற்கு இட்டுச் சென்றிருந்தது.

- **2016இன் முதலரைப்பகுதியில் சொத்துக்கள் கொள்வனவின் குறைவானது, ஒதுக்கு சொத்துக்களின் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியை முதன்மையாக பிரதிபலித்தது.** நிதியியல் சொத்துக்களின் மொத்த தேறிய கொள்வனவானது, 2015இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 419 மில்லியன் உயர்வுடன் ஒப்பிடுகையில், 2016இன் முதலரைப் பகுதியில் ஐ.அ.டொலர் 1,882 மில்லியனினால் வீழ்ச்சியடைந்தது. சொத்துக்கள் கொள்வனவின் குறைவானது, ஒதுக்கு சொத்துக்களின் குறிப்பிடத்தக்களவு குறைவின் முக்கிய காரணமாக காணப்பட்டது. அதேவேளையில், நாணயம் மற்றும்

வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனத்தின் வைப்புச் சொத்துக்கள், இக்காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 134 மில்லியன் குறைவாக காட்சிப்படுத்தப்பட்டது. மேலும், வதிவற்றோருக்கு இலங்கை ஏற்றுமதியாளர்களால் வழங்கப்பட்ட வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் 2016இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொர் 95 மில்லியனால் அதிகரித்திருந்தது.

- **2016இன் முதலரைப் பகுதியில், தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் ஒரு குறைவினை பதிவு செய்திருந்தது.** குறிப்பாக 2016இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில், உலக பொருளாதாரத்தின் மெதுவான மீட்சியுடனான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அடக்கமான மனோபாவம் மற்றும் ஐக்கிய அமெரிக்க பெடறல் றிசேவின் அதிகரித்த கொள்கை வீதங்கள் என்பன வேறு தோற்றம்பெற்று வரும் பொருளாதாரத்தைப் போன்று அரசாங்க பிணையங்களின் வெளிநாட்டு முதலீடுகளின் தொடர்ச்சியான வெளிப்பாய்ச்சல்களை தூண்டியது. 2016இன் முதல் அரைவாசிப்பகுதியில் வெளிநாட்டு முதலீடுளாக ஐ.அ.டொலர் 2 மில்லியன் கொண்ட சிறிதளவான தேறிய உட்பாய்ச்சலை பெற்றிருந்த அதேவேளை இது கொழும்பு பங்குபரிவர்த்தனையிலிருந்து ஐ.அ.டொர் 45 மில்லியன் என்றளவாக வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் ஐ.அ.டொர் 373 மில்லியன் கொண்ட திறைசேரி முறிகளின் கணிசமான தேறிய வெளிப்பாய்ச்சல் என்பவற்றிற்கும் இட்டுச் சென்றிருந்தது. அதேவேளை, 2015இன் தொடர்பான காலப்பகுதியின், ஐ.அ.டொலர் 147 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைக் காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 354 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலுடன், கடன் திட்டங்களுக்கான அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் அதிகரித்தன. எனினும், 2016இன் முதலரைப் பகுதியில், வங்கித் துறை, கூட்டுறவுத்துறை மற்றும் அரசுக்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளின் நிதியியல் கணக்கின் மீதான மொத்த பங்களிப்புக்கள் தொடர்ந்தும் மிதமாக விளங்கியது. இருப்பினும், ஆண்டின் ஆரம்பத்தில் ஐ.அ.டொலர் 449 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைப் பகுதியில் ஐ.அ.டொலர் 425 மில்லியன் உட்பாய்ச்சலுடன், வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களுக்கான வெளிநாட்டு கடன்கள் தொடர்ந்து உயர்வானதாக விளங்கியது. அதேவேளை, 2015இன் முதலரைப் பகுதியில் தேறிய உட்பாய்ச்சல் ஐ.அ.டொலரின் 79 மில்லியனுடன் ஒப்பிடுகையில் தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் தேறிய கடன் உட்பாய்ச்சல்கள், 37 மில்லியன் ஐ.அ.டொலர்களாக வகைகூறப்பட்டது. மேலும், இலங்கையின் கம்பனிகள், முதன்மையாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பனவற்றால் பெற்றுக் கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள், வருடத்தின் முதலரைப் பகுதியில் 45 மில்லியன் ஐ.அ.டொலர்களால் குறைந்தது.

- **2016இன் முதலரைப்பகுதியில் மத்திய வங்கி துணைநில் ஒழுங்குகளின் கீழ் பன்னாட்டு நாணய நிதியக்கடனின் மீள் செலுத்தலை தொடர்ந்ததுடன் இந்திய ஒதுக்கு வங்கி மற்றும் சார்க் நிதியம் என்பனவற்றுடன் பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளையும் மேற்கொண்டது.** பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஒழுங்கு வசதியின் கீழான மீள்கொடுப்பனவுகள் 2016இன் முதலரைப் பகுதியில் ஐ.அ.டொலர் 264 மில்லியனிற்கு வகை கூறப்பட்டது. அதேவேளை இலங்கை 2016 மார்ச்சில் இந்திய ஒதுக்கு வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளுக்கு பெற்றுக்கொண்ட ஐ.அ.டொலர் 1,100 மில்லியனை மீளச் செலுத்தியது. இது சார்க் நிதியத்துடனான புதிய பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளின் ஐ.அ.டொலர் 400 மில்லியனாலும் இந்திய ஒதுக்கு வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளின் ஐ.அ.டொலர் 700 மில்லியனினாலும் கிடைக்கப்பெற்றது. எனினும், இந்திய ஒதுக்கு வங்கியிடம் இருந்து பெற்றுக் கொண்ட ஐ.அ.டொலர் 700 மில்லியன் கொண்ட பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் முதல் தொகுதியின் பெறுவனவினூடாக 2016 யூனில் தீர்க்கப்பட்டது. 2016இன் முதலரைப் பகுதியில் ஐ.அ.டொலர் 34 மில்லியனுக்கு வகை கூறிய ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்கள் மீதான தேறிய கொடுக்கல் வாங்கல்கள் மீளச் செலுத்தப்பட்டது.

- **வெளிநாட்டு நேரடி முதலீட்டு வடிவிலான உட்பாய்ச்சல்கள் 2016இன் முதலரைப் பகுதியில் மந்தநிலையில் காணப்பட்டது.** முதலீட்டு நோக்கங்களுக்கான முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகளை உள்ளடக்கும் வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பான மொத்த உட்பாய்ச்சல்கள் 2015இன்

தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 534 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016இன் முதலரைப் பகுதியில் ஐ.அ.டொலர் 336 மில்லியனுக்கு குறைவடைந்தது. முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் நீங்கலான நேரடி முதலீட்டிலிருந்தான உட்பாய்ச்சல்கள் 2015இன் முதலரைப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 268 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 216 மில்லியனிற்கு வகை கூறியது. புதிய செயற்றிட்டங்களின் வடிவிலான நேரடி முதலீடுகள் மட்டுப்படுத்தப்பட்ட உட்பாய்ச்சல்களாகக் காணப்பட்ட வேளையில் தற்போது இடம்பெற்றுவருகின்ற பிரதான செயற்றிட்டங்களும் நேரடி முதலீடுகளின் மிதமான மட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. ஆண்டு காலப்பகுதியில் முக்கியமான நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் தொலைத்தொடர்பூட்டல், சுற்றுலாத்துறை மற்றும் தயாரிப்புத் துறை போன்வற்றிற்கு ஊடுகடத்தப்பட்டது.

- **வெளிநாட்டு துறையின் உறுதிப்பாடு மீதான தொடர்ச்சியான அழுத்தங்களின் மீள் திரும்பல்கள் மற்றும் சாதகமற்ற பூகோள பொருளாதார சூழலின் கசிவுத்தாக்க விளைவுகள் என்பனவற்றால் இலங்கை 2016 யூனில் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து மூன்று வருட விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஒன்றைப் பெற்றுக்கொண்டது.** பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை மேம்படுத்தல், சந்தை நம்பகத்தன்மையினை பலப்படுத்துதல், போட்டித்தன்மை மற்றும் வெளிநோக்கிய போக்கினை மேம்படுத்துகின்ற அதேவேளை, சவால்மிக்க உலகளாவிய சூழலில் வெளிநாட்டுத் துறையின் தாக்குபிடிக்கக் கூடிய தன்மையை வலுப்படுத்துதல் என்பனவற்றை அடைந்து கொள்வதே விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஆதரவளிக்கப்பட்ட பொருளாதார செயற்றிட்டத்தின் ஒட்டுமொத்த குறிக்கோள்களாகும். இலங்கையின் சென்மதி நிலுவையின் நிலைமையை மேம்படுத்தவும் அரசாங்கத்தின் பொருளாதார சீர்திருத்த செயற்றிட்டத்திற்கு ஆதரவளிக்கவும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 1.1 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) பெறுமதியான விரிவாக்கப்பட்ட நிதி வசதியால் அடையப்பப்பட்டன. 2016 யூனில் ஐ.அ.டொலர் 169 மில்லியனுக்கு வகை கூறும் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் முதற்தொகுதி பகிர்ந்தளிக்கப்பட்டது. எஞ்சிய தொகையானது 2019 ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் ஆறு தொகுதிகளாகப் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய அபிவிருத்தி பங்காளர்களிடமிருந்தான மேலதிகமான அபிவிருத்தி உதவிகளைக் கவருகின்ற அதேவேளை, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பகத்தன்மையை நிலைநிறுத்துதல் போன்றவற்றை அடைந்துகொள்வதனையும் இந்நிகழ்ச்சித்திட்டம் கொண்டிருக்கின்றது. பன்னாட்டு நாணய நிதியத்தின் மீளாய்வுகளுக்கிணங்க விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 2016 யூனிற்கான இறை, நாணயத் துறை மற்றும் தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்குகளை இலங்கை வெற்றிகரமாக அடைந்துள்ளதுடன் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழான இரண்டாவது தொகுதியை 2016 நவெம்பரில் இலங்கை பெற்றுக்கொள்ளும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## சென்மதி நிலுவை

- **சென்மதி நிலுவையானது 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் 2015இன் அதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2.3 பில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 243 மில்லியன் மிகைநிலையை பதிவுசெய்திருந்தது.** பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட விரிவாக்கிய நிதி வசதியின் முதலாவது தொகுதியின் பெறுவனவு மற்றும் கூட்டுக்கடன்களின் பெறுகைகள் என்பவற்றுக்குப் பின்னரும் 2016இன் யூன் மாதம்

வரைபடம் 5.7 சென்மதி நிலுவைகள்



வரைக்கும் சென்மதி நிலுவையானது பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் பெறுமதியான 10வது நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்களின் பெறுகைகளின் பெறுவனவுகளின் முக்கிய காரணத்தால் யூலை நடுப்பகுதியில் மிகை நிலைக்கு திருப்பம்பெற்றிருந்தது.

## பன்னாட்டு முதலீட்டு நிலைமை

- **இலங்கையின் வெளியக சொத்து நிலைமை மற்றும் பொறுப்பு நிலைமை ஆகிய இரண்டும் 2015இன் இறுதியில் காணப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடுமிடத்து 2016இன் யூன் இறுதியில் வீழ்ச்சியடைந்திருந்தது.** காலப்பகுதியில் ஒதுக்கு சொத்துக்களில் ஏற்பட்ட கணிசமான விழ்ச்சியே சொத்துக்களின் இருப்பு நிலையின் விழ்சிக்கான முதன்மையான காரணமாகும். 2015இன் இறுதியில் ஐ.அ.டொலர் 7,304 மில்லியனாக காணப்பட்ட ஒதுக்கு சொத்து நிலைமை 2016இன் யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 5,292 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் இலங்கையின் ஏற்றமதியாளர்களால் வழங்கப்பட்ட வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற நிலைமை மெதுவாக அதிகரித்திருந்த அதேவேளை வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் ஏனைய கணக்குகளின் வருமதிகள் 2015இன் இறுதியில் காணப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடுமிடத்து 2016 யூன் இறுதியில் அதே மட்டத்தில் காணப்பட்டது. அதேவேளை நேரடி முதலீடுகளின் சொத்துக்களின் நிலைமையும் காலப்பகுதியில் அதிகரித்திருந்தது.

- **மொத்த வெளியக பொறுப்பு நிலைமையானது 2015இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2016 யூன் இறுதியில் மிதமானளவில் வீழ்ச்சியடைந்திருந்தது.** மொத்த வெளியக பொறுப்பு நிலைமையானது 2015இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 53,586 மில்லியனிலிருந்து 2016இன் யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 53,283 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. மொத்த பொறுப்பு நிலைமையின் விழ்ச்சிக்கு நேரடி முதலீடுகள் மற்றும் பட்டியலிடப்பட்ட முதலீடுகள் என்பவற்றின் இருப்பு நிலைமைகளின் வீழ்ச்சியே காரணமாகும். குறிப்பாக பகிரங்கமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பெறுமதி இழப்புக்களின் விளைவாக நேரடி முதலீடுகளின் இருப்பு நிலைமைகள் ஐ.அ.டொலர் 73 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. பட்டியலிடப்பட்ட முதலீடுகளின் வெளிநின்ற இருப்பு நிலைமை 2015இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 12,375 மில்லியனிலிருந்து 2016இன் யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 11,839 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. இவ்வீழ்ச்சிக்கு 2016இன் முதலரைப்பகுதியில் இடம்பெற்ற அரச பிணையங்களின் வெளிப்பாய்ச்சல்களே முக்கிய காரணமாகும். அதன் விளைவாக வெளிநின்ற படுகடன் பிணையங்கள் 2016இன் இறுதியில் ஐ.அ.டொலர் 10,839 மில்லியனிற்கு 2015இன் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 10,706 மில்லியனிலிருந்து வீழ்ச்சியடைந்திருந்தது. பங்குரிமை மற்றும் முதலீட்டு நிதிப் பங்குகள் என வகைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த வெளிநின்ற நிலைமை மிதமானளவான தேறிய உட்பாய்ச்சலை கொண்டிருந்தபோதிலும் பகிரங்கமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குரிமை மீதான பெறுமதி இழப்புக்களின் பிரதான காரணத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

- **மொத்த பொறுப்பு நிலைமையின் பாரிய கூறாக காணப்படும் வெளிநாட்டு கடன்களின் வெளிநின்ற நிலைமை 2016இன் முதலரைப்பகுதியில் அதிகரித்திருந்தது.** அரசின் செயற்றிட்ட கடன்களின் பொறுப்பு நிலைமை மிதமான விரிவாக்கத்தை பதிவுசெய்திருந்த அதேவேளை வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற கடன் நிலைமை ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்திருந்தது. நேரடி முதலீடு மற்றும் பட்டியலிடப்பட்ட முதலீடு என்பவற்றின் வடிவிலான தனியார் துறைக்கான கீழ்மட்ட உட்பாய்ச்சல்களுடன் இசைந்து செல்லும் வகையில் தனியார் துறைக்கான கடன் உட்பாய்ச்சல்களும் காலப்பகுதியில் தேக்கமடைந்து காணப்பட்டது. வீழ்ச்சியடைந்த சொத்து மற்றும் பொறுப்பு நிலைமைகளின் விளைவாக தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2015இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 42,699 மில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலையிலிருந்து 2016 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 44,300 மில்லியனிற்கு சிறிதளவால் மாத்திரம் தேய்வடைந்திருந்தது.

## வெளிநின்ற வெளியக படுகடன் நிலைமை

- **2016இன் முதலரைப் பகுதியில் இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளியக படுகடன் இருப்பு சிறிதளவில் அதிகரித்திருந்தது.** எனினும் வெளிநின்ற வெளியக

படுகடனின் வளர்ச்சியானது மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியோடு இசைந்து செல்லும் வகையில் காணப்பட்டதுடன் 2015 இறுதியிலுள்ளவாறான நிலைமையுடன் ஒப்பிடுமிடத்து 2016இன் யூன் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநின்ற படுகடன் அதே மட்டத்தில் காணப்படுவதற்கு ஏதுவாயிருந்தது. முன்னர் அரசின் முக்கியமான கடன்பெறுகை மூலமாக காணப்பட்ட செயற்றிட்ட கடன்களுடன் ஒப்பிடுமிடத்து கடந்த சில வருடங்களாக அரசாங்கமானது அதனது வெளிநாட்டு நிதியிடல் தேவைப்பாட்டிற்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீது அதிகளவில் தங்கியிருந்தது. நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் பொறுப்புக்களின் வெளிநின்ற நிலைமை 2016இன் யூனில் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 700 மில்லியன் கொண்ட இந்திய ஒதுக்கு வங்கியின் பரஸ்பர பரிமாற்றல்கள் வசதிகளின் தீர்ப்பனவுகளுடன் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் விரிவாக்கிய நிதி வசதி தொகுதிகளின் பெறுவனவுகளுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடனான மத்திய வங்கியின் வெளிநின்ற வெளியக படுகடன் படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற படுகடனானது நீண்டகால கடன்களின் விரிவாக்கத்துடன் அதிகரித்த அதேவேளை நேரடி முதலீட்டு தொழில் முயற்சியாண்மைகள் மற்றம் கம்பனித் துறைகள் என்பவற்றுக்கான மட்டுப்படுத்தப்பட்ட கடன் உட்பாய்ச்சல்களுடன் தனியார் தறையின் வெளிநின்ற படுகடன் அதே மட்டத்தில் காணப்பட்டது.

பெறுகைகைள் அதேபோன்று மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய சார்க்நிதியிடல் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் வசதிகளின் கீழான ஐ.அ.டொலர் 400 என்பன நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு செய்திருந்தன. அதேவேளை இந்திய ஒதுக்கு வங்கி பரஸ்பர பரிமாற்றல்கள் வசதிகளின் தீர்ப்பனவுகள், வெளிநாட்டு நாணய படுகடன் பணிக் கொடுப்பனவுகள், உள்நாட்டு அந்நிய செலாவணி சந்தைக்கான திரவத்தன்மையின் நிரம்பல்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய - துணைநில் வசதிக்கான மூலதன கொடுப்பனவுகள் என்பன ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டங்கள் மீது சமனிலைப்படுத்தியிருந்தன. அதேவேளை மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்கிய மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2016 ஒகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 9.2 பில்லியன் ஆக இருந்தது. மொத்த பன்னாட்டு ஒதுக்குகளின் சிறிதளவிலான இவ்வீழ்ச்சியானது பிரதானமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் வீழ்ச்சியிலிருந்து ஏற்படுத்தப்பட்டிருப்பினும் அதிகளவான வீழ்ச்சியானது வர்த்தக வங்கிகள் வசமுள்ள சொத்துக்களின் அதிகரிப்பினால் தணிக்கப்பட்டிருந்தது. 2016இன் ஒகத்து இறுதியில் மொத்த பன்னாட்டு ஒதுக்குகளின் இறக்குமதி இயலளவு 5.9 மாதங்களுக்கு சமனாகவிருந்தது.

## ஒதுக்குச் சொத்து நிலைமை

- **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.5 பில்லியன் பெறுமதியாகவிருந்ததுடன் இது 4.1 இறக்குமதி மாதங்களுக்கு சமனாக மதிப்பிடப்பட்டது.** பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து பெற்றக்கொள்ளப்பட்ட மூன்று வருடங்களுக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் முதலாவது தொகுதியின் (சிறப்பு எடுப்பனவு உரிமை 119 மில்லியன் அல்லது அண்ணளவாக ஐ.அ.டொலர் 169 மில்லியன்) பெறுவனவுகள், ஐ.அ.டொலர் 700 மில்லியன் பெறுமதியான இரண்டு கூட்டுக்கடன்களிலிருந்தான பெறுகைகள் மற்றும் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் பெறுமதியான நாட்டிற்கான 10வது பன்னாட்டு முறிகளின்

வரைபடம் 5.8 மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் இறக்குமதி மாதங்களும்



## நாணயமாற்று வீத அசைவுகள்

- **இலங்கை ரூபாவின் வெளியக பெறுமதி 2016இன் செத்தெம்பர் இறுதி வரைக்கும் ஒப்பீட்டளவில் உறுதியாக காணப்பட்டது.** எனினும் குறிப்பாக 2016இன் முதல் நான்கு மாதங்களில் ரூபாவின் பெறுமதி தேய்வடைவதற்கு கணிசமானளவு அழுத்தங்கள் காணப்பட்டன. இது பிரதானமாக இறக்குமதி செலவினங்களின் தொடர்ச்சியான வெளிப்பாய்ச்சல் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் மற்றும் மிதமான உட்பாய்ச்சலுக்கு மத்தியில் ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசர்வின் வட்டிவீத அதிகரிப்பை தொடர்ந்தான அரச பிணையங்கள் சந்தைகளிலிருந்தான முதலீடுகளின் மெதுவடைவு என்பவற்றை பொறுத்தமட்டில் குறிப்பாக சென்மதி நிலுவை நிதியியல் கணக்கிற்கான தொடர்ச்சியான வெளிப்பாய்ச்சல்களால் காரணமாயிருந்தது. வெளியக கணக்குகளின் இத்தகைய அபிவிருத்திகள் உள்நாட்டு அந்நியச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மையை நிரம்பல் செய்வதனூடாக மத்திய வங்கியின் தலையீட்டை குறிப்பாக ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தேவைப்படுத்தியிருந்ததுடன் இது ஆய்விற்குறிய காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபா சார்பளவில் உறுதித்தன்மையை அடைவதற்கு பங்களித்திருந்தது. பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது தொகுதியின் பெறுவனவுகள், அரசாங்க பிணையங்கள் சந்தைகளிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களின் படிப்படியான மீள்திரும்பல்கள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் கூட்டுக்கடன்கள் என்பவற்றிலிருந்தன பெறுகைகள் என்பவற்றின் விளைவாக இவ்வாண்டின் மே மாதத்திலிருந்து ரூபாவின் மீதான பெறுமதித் தேய்வு அழுத்தங்கள் படிப்படியாக இலகுபடுத்தப்பட்டிருந்தன. ஓட்டுமொத்தமாக இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ஆண்டின் செத்தெம்பர் மாத இறுதி வரைக்கும் 1.8 சதவீத தேய்வை பதிவுசெய்திருந்தது. குறுக்க நாணயங்களின் நாணய மாற்ற வீத அசைவுகளை பிரதிபலிக்கும் வகையில் இலங்கை ரூபா யப்பானிய யென் (17.72 சதவீதம்), யூரோ (4.37 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (1.24 சதவீதம்) என்பவற்றக்க எதிராக தேய்வடைந்திருந்த அதேவேளை ஐக்கிய அமெரிக்க டொலருக்க எதிராக 2016 யூனில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான பிரித்தானியாவின் விலகள் மீதான வாக்களிப்பை தொடர்ந்து ஸ்ரேலிங் பவுன் தேய்வடைந்ததன் பின்னனியில் அதற்கு எதிராக இலங்கை ரூபா (12.31 சதவீதம்) உயர்வடைந்திருந்தது.

- **குறிப்பாக 2016இன் முதல் நான்கு மாதங்களில் நாணயமாற்ற வீதத்தின் மீதான அழுத்தத்தை தணிக்கும் வகையில் உள்நாட்டின் அந்நியச்செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டிருந்தது.** ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தேறிய அடிப்படையில் அந்நியச் செலாவணி சந்தையில் நிரம்பல் செய்திருந்த மத்திய வங்கி உள்நாட்டு சந்தையிலிருந்து தேறிய அடிப்படையில் அந்நியச் செலாவணிகளை உள்ளீர்த்ததன் பின்னர் இப்போக்கானது படிப்படியாக மீள்திருப்பம்பெற்றது. இது பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் யூன் இறுதியிலான தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்கினை அடைந்திருந்த அதேவேளை பன்னாட்டு ஒதுக்கினை படிப்படியாக கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு செய்திருந்தது. செத்தெம்பர் இறுதி வரையான ஆண்டு காலப்பகுதியில் தேறிய அடிப்படையில் மத்திய வங்கியானது 2015இன் அதே காலப்பகுதியில் உள்ள ஐ.அ.டொலர் 2,394 மில்லியன் தேறிய நிரம்பலுடன் ஒப்பிடுமிடத்து ஐ.அ.டொலர் 693 மில்லியனை நிரம்பல் செய்திருந்தது.

- **2016இன் முதல் ஒன்பது மாதங்களில் 5-நாணய மற்றும் 24-நாணய ஆகிய இரண்டு தாக்கமுள்ள நாணயமாற்று வீத சுட்டெண்கள் தேய்வடைந்திருந்தன.** பெயரளவு தாக்கமுள்ள நாணய மாற்று வீத சுட்டெண்களின் பெறுமதித்தேய்வானது ஐக்கிய அமெரிக்க டொலர்

வரைபடம் 5.9 தாக்கமுள்ள நாணயமாற்று வீதச் சுட்டெண்கள் 24 - நாணயம் (2010=100)



மற்றும் குறுக்கு நாணய செலாவணி வீதங்களிலான அசைவுகளுக்கு அமைவாக இசைந்து செல்லும் ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமைக்கு இட்டுச்சென்றிருந்தது. அதன்கிணங்க 2016ஆம் ஆண்டின் செத்தெம்பர் இறுதி வரைக்கும் 5-நாணய மற்றும் 24-நாணயங்களிலான பெயரளவு தாக்கமுள்ள நாணய மாற்று வீத சுட்டெண்கள் முறையே 1.67 சதவீதம் மற்றும் 2.64 சதவீதத்தால் தேய்வடைந்திருந்தது. அதேவேளை பெயரளவு நாணயமாற்று வீதங்களில் ஏற்படும் விலகல்களுக்கு மேலாக நாணய கூடைக்குள் காணப்படும் நாடுகளின் பணவீக்க வேறுபாடுகளை கருத்திற்கொண்டு கணிப்பிடப்படும் 5-நாணய மற்றும் 24-நாணய உண்மைத் தாக்கமுள்ள நாணயமாற்று வீத சுட்டெண்கள் ஆய்விற்குறிய காலப்பகுதியில் முறையே 0.06 சதவீதம் மற்றும் 2.06 சதவீதத்தால் தேய்வடைந்திருந்ததுடன் இது பன்னாட்டு சந்தையில் நாடுகளின் போட்டித்தன்மையில் ஏற்பட்ட சில முன்னேற்றங்களை காட்டியிருந்தது.

- **2016இன் முதல் மூன்று காலாண்டுகளில் உடனடி மற்றும் முன்னோக்கிய கொடுக்கல்வாங்களின் நியதிகளில் உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தை ஒரு விரிவாக்கத்தை பதிவுசெய்திருந்தது.** 2016 செத்தெம்பர் இறுதியில் உடனடி கொடுக்கல்வாங்கள்களின் மொத்த அளவு 2015இன் அதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4,502 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,779 மில்லியனாக காணப்பட்டது. அதேவேளை முன்னோக்கிய

**வரைபடம் 5.10** வங்கிகளுக்கிடையிலான காலாண்டு முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவுகள்




கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2015இன் அதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4,945 மில்லியனிலிருந்து 2016இன் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொலர் 6,462 மில்லியனுக்கு அதிகரித்திருந்தது. ஆண்டின் இதுவரை காலப்பகுதியில் சராசரி முன்னோக்கிய கட்டுப்பணத்திலான அசைவுகள் மற்றும் வர்த்தக வங்கிகளின் தேறிய திறந்த நிலைமை என்பவற்றின் அடிப்படையில் சராசரியாக சந்தைப் பங்குபற்றுனர்கள் இலங்கை ரூபாவின் பெறுமதித்தேய்விற்கான எதிர்பார்க்கையை எடுத்துக்காட்டியிருந்தனர். ஒரு மாதம் மற்றும் மூன்று மாதம் கொடுக்கல்வாங்கள்களுக்கான சராசரி முன்னோக்கிய கட்டுப்பணம் சராசரி வட்டிவீத வேறுபாடு மட்டங்களுக்கு மேலாக காணப்பட்ட அதேவேளை வர்த்தக வங்கிகளின் சராசரி தேறிய திறந்த நிலைமை 2016 செத்தெம்பர் இறுதியில் நேர்க்கணிய மட்டத்தில் காணப்பட்டதுடன் இது ஒட்டுமொத்த பெறுமதி தேய்வு எதிர்பார்க்கையை காட்டியிருந்தது.

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **வெளிநாட்டுத்துறையின் செயலாற்றம் 2017இல் படிப்படியான முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப் படுகின்றது.** சென்மதி நிலுவை நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தின் பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சி நிரல்கள் என்பவற்றிற்கு துணைபுரியும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சி திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட நேர்க்கணிய தாக்கங்களுடன் நாட்டின் சென்மதி நிலுவை நிலைமைகள் 2016இன் இரண்டாம் அரைப்பகுதி மற்றும் 2017இல் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி ஒட்டுமொத்த சென்மதி நிலுவையானது 2017இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 690 மில்லியன் மிகை நிலையை பதிவுசெய்யுமென எறிவுசெய்யப்பட்டுள்ளதுடன் பன்னாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனுக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் மெதுவான உலக பொருளாதார வளர்ச்சி, எரிபொருள் விலைகளின் சாத்தியமான அதிகரிப்பு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிக்கு கீழான வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பன வெளிநாட்டுத்துறை அபிவிருத்தியின் எதிர்பார்க்கப்பட்ட பாதையின் மீது கீழ்நோக்கிய இடர்நேர்வினை கொண்டுள்ளன.

- **உலக பொருளாதாரத்தின் முன்னேற்றமடைந்த பொருளாதார நிலைமைகள் மற்றும் முக்கிய வர்த்தக பங்காளர்களுடனான முன்னேற்றமடைந்த வர்த்தக உறவுகள் என்பவற்றுடன் ஏற்றுமதி வருவாய்கள் 2017இல் 9.6 சதவீதத்தால் அதிகரிக்குமென எறிவு செய்யப்படுள்ளது.** 2016இன் ஏப்பிரல் மாதத்திற்கான உலக வர்த்தக நிறுவனத்தின் எறிவுகளின்படி உலகின் பொருட்களிலான வர்த்தகத்தின் அளவானது 2016இல் 2.8 சதவீதத்தாலும் 2017இல் 3.6 சதவீதத்தாலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் ஊடாக ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிற்கு சலுகைரீதியில் நுழைவதற்கான சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கு மேலாக எதிர்காலத்தில் ஜீஎஸ்பி பிளஸ் வசதியின் கீழ் ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கு சலுகைரீதியான நுழைவினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளது. 2016 நடுப்பகுதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கான தடையை நீக்கியமையும் மீன் ஏற்றுமதியிலிருந்தான வருவாயை அதிகரிக்கும். மத்திய கிழக்கு மற்றும் ரஸ்யா போன்ற நாடுகளின் படிப்படியான முன்னேற்றத்துடன் 2017இல் இலங்கை தேயிலைக்கான கேள்வி அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சாதகமான உள்நாட்டு பொருளாதார தோற்றப்பாடுகளுடன் இணைந்து இக்காரணிகள் ஏற்றுமதியின் செயலாற்றத்தை மேம்படுத்துவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதேவேளை குறிப்பாக பெற்றோலியத்தின் விலைகள் பன்னாட்டு சந்தையில் எதிர்பார்க்கப்பட்ட பண்டங்களின் விலைகளின் அதிகரிப்பின் பிரதான காரணத்தினால் 2017இல் இறக்குமதி செலவினம் 7.1 சதவீதத்தில் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் உயர்ந்த மட்ட உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் வகையில் 2017இல் இறக்குமதி அளவுகளும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2017இல் ஆண்டுக்காண்டு அடிப்படையில் வர்த்தக பற்றாக்குறையானது 4.2 சதவீதத்தால் விரிவாக்கமடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.9 சதவீதமாக காணப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

- **சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கு 2017இல் விரிவாக்கமடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** குறிப்பாக அதிகளவான செலவை மேற்கொள்ளக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் வடிவிலான அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களின் தொடர்ச்சியான விரிவாக்கத்தின் ஊடாக சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கிற்கு சுற்றுலாத்துறை பிரதான பங்களிப்பை வழங்கக்கூடும். தொடர்ச்சியான முதலீட்டு நடவடிக்கைகள் ஊடாக நாட்டின் சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பின் அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை மேம்படுத்தல் நடவடிக்கைகள் என்பவற்றின் ஊடாக சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் சேர்த்துக்கொள்ளப்படும். பயணிகள் கட்டணங்களிலிருந்தான பெறுவனவுகளும் அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் அதிகரிப்பதுடன் போக்குவரத்து பணிகளிலிருந்தான பெறுவனவுகளின் எறிவுசெய்யப்பட்ட அதிகரிப்பை நோக்கி பங்களிப்பு செய்யக்கூடும். எனினும், 2017 சனவரியிலிருந்து ஓடுபாதையின் சீரமைப்பிற்காக மூன்று மாதங்களுக்கு பகுதியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மூடப்படுகின்றமையானது ஆண்டின் முதலரைப்பகுதியில் பணிகள் கணக்கின் மீது சில தாக்கங்களை கொண்டிருக்கக்கூடும். எறிவுசெய்யப்பட்ட தகவல் தொழில்நுட்பத்தின் உயர் வெளிநாட்டு முதலீடு மற்றும் உட்கட்டமைப்புடன் தொடர்புடைய செயற்றிட்டங்கள் என்பன பணிகளிலிருந்தான வருவாய்களின் எறிவுசெய்யப்பட்ட அதிகரிப்பிற்கு பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை இலங்கை உயர் வருமானத்தை உருவாக்கக்கூடிய துறைகள் முழு பணிகளுக்குள் பன்முகப்படுத்தப்பட்டதுடனான தொடர்ச்சியாக கைத்தொழிலின் அபிவிருத்தியுடன் தொலைத்தொடர்பூட்டல், கணணி மற்றும் தகவல் பணிகள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் அதிகரிக்கக்கூடும். திட்டமிடப்பட்டுள்ள கொழும்பு சர்வதேச நிதியியல் நகரத்தின் உருவாக்கமும் 2017இற்கு அப்பால் பணிகள் துறையின் விரிவாக்கத்தினை நோக்கி தொடர்ச்சியான தூண்டுதல்களை வழங்கக்கூடும்.

- **2017இல் தொழிலாளர் பணவனுப்பல்கள் மிதமான வளர்ச்சியை பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.** தொழில்முறை வேலைவாய்ப்பு வகைகளிலிருந்து பெறப்படும் அதிஉயர் பங்களிப்புகளுடனான வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் இயைபு

மாற்றத்தால், பணவனுப்பல்களின் வளர்ச்சியானது ஆதரவளிக்கப்படும். அதேவேளையில், தேர்ச்சியற்ற வகையின் கீழ் பெண்களின் இடம்பெயர்வினை ஊக்கமிழக்கச் செய்கின்ற கொள்கைகள் மற்றும் மத்தியகிழக்கு நாடுகளின் பொருளாதா தேக்கம் போன்றவை தொழிலாளர் பணவனுப்பல்களினை எதிர்மறையாகப் பாதிக்கும். தேர்ச்சிப் பெற்ற இடம்பெயர்வை ஊக்கப்படுத்தும் முக்கியத்துவத்தின் சிறப்பம்சமானது, இடம்பெயர் தொழிலாளர்களுக்கு அதியுயர் நன்மைகளை வழங்கமுடியும். மேலும், ஒப்பிட்டளவில் குறைவான வேலையில்லா தன்மையின் ஊடாக பிரதிபலிக்கின்றவாறு, நாட்டின் மட்டுப்படுத்தப்பட்ட தொழிற்படையின் கிடைக்கக்கூடிய தன்மையின் பிண்ணனியில் இலங்கையானது, உள்நாட்டில் உயர்பெறுமதியுடைய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும் பகுதியளவில் தேர்ச்சி பெற்ற வகைகளின் கீழ் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் இடம்பெயர்வினை ஊக்கப்படுத்தி சாத்தியமான சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முயற்சி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- **வர்த்தக விற்பனை, சேவைகள் மற்றும் இரண்டாந்தர வருமான கணக்கு என்பனவற்றில் 2016இல் நடைமுறை கணக்கு பற்றாக்குறை அண்ணளவாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கிட்டத்தட்ட 2.5 சதவீதமாக இருக்குமென எறிவு செய்யப்பட்டுள்ளதுடன், 2017இல் கிட்டத்தட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2 சதவீதத்திற்கு குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.** 2016ஆம் ஆண்டில் விரிவாக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற வர்த்தகப் பற்றாக்குறையானது 2017 காலப்பகுதியில் எரிபொருள் விலைகளின் எறிவுசெய்யப்பட்ட அதிகரிப்பின் காரணத்தால் இறக்குமதிகளின் வளர்ச்சியானது அதிகரிக்கக்கூடிய அதேவேளை ஏற்றுமதிகளின் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியின் விளைவாக 2017இல் படிப்படியாக முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் ஏற்றுமதி சேவைகளில் இருந்து எதிர்வுகூறப்பட்ட அதிகூடிய உட்பாய்ச்சல் மூலம் வர்த்தகக் கணக்குகளின் எதிரான தாக்கம் குறைவடையுமெனினும் தொடர்ச்சியான வர்த்தக இடைவெளி, ஏற்றுமதியின் குறைந்தளவான பன்முகப்படுத்தல் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான உயர்வான தங்கியிருப்பு போன்றவை நாட்டின் நடைமுறைக் கணக்கில் நிலையான சில பிரச்சனைகள் காணப்படுவதனை சுட்டிக்காட்டுகின்றன.

- **நிதியியல் கணக்கின் வருகைகள், 2017இல் ஒரு மிதமான அதிகரிப்புக்கு எறிவு செய்யப்பட்டது.** தனியார் துறையின் உட்பாய்ச்சல், வெளிநாட்டு நேரடி முதலீட்டின் ஆதரவுடன் மேம்படுமென எறிவு செய்யப்பட்டது. எனினும், வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலின் எதிர்பார்க்கபட்ட அளவினைக் காட்டிலும் குறைதளவான வளர்ச்சியானது ஒரு முக்கிய பிரச்சனையாக ஏற்கனவே இணங்காணப்பட்டுள்ளது. இலங்கை நடுத்தர - உயர் வருமான வகையினை நோக்கி முன்னேற்றமடைவதனால் குறைவடைந்து வருகின்ற சலுகை அடிப்படையிலான கடன்கள், தொழிலாளர் பண அனுப்பல்களில் ஏற்பட்ட மிதமான போக்கு மற்றும் அபிவிருத்தி அடைந்த பொருளாதாரங்களின் நாணயக் கொள்கையின் சமநிலைத் தன்மையின் காரணமாக புதிய கடன்பாடுகளுக்கான செலவிலான சாத்தியமான அதிகரிப்பு போன்றவற்றின் காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் கவர்ந்துகொள்வது முக்கியமாகக் காணப்படுகின்றது. அதேவேளையில், பன்னாட்டு நாட்டிற்கான முறிகளின் வழங்களின் ஊடாகவும் வெளிநாட்டு செயற்றிட்ட கடன் வடிவில் அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் தொடரும். பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் வெற்றிகரமான செயலாற்ற இலக்குகளின் அடைவின் பின்னர் இலங்கை தொடர்ச்சியாகவும் எஞ்சியுள்ள பகுதிகளைப் பெற்றுக் கொள்ளும். ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்ற கடனை உருவாக்காத மூலதனப் பாய்ச்சல்களுடன் எதிர்பார்க்கப்பட்ட உயர் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களின் ஊடாக வெளிநாட்டுத்துறையின் அடித்தள முன்னேற்றங்களானது பொருளாதாரத்தில் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையை அதிகரிக்கச் செய்யும்.